**செய்தி வெளியீடு எண்:70** **நாள்:01.02.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று **(1.2.2021)** தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழ்ப் பேரறிஞர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும், தமிழ் அமைப்பிற்கும், ஊடகங்களுக்கும், திருவள்ளுவர் திருநாள் விருதுகள், சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகள், தமிழர்தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ், வாரஇதழ், திங்களிதழ் விருதுகள், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக விருதுகள், சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுகள், மதுரை, உலகத் தமிழ்ச் சங்க விருதுகள், தமிழ்ச் செம்மல் விருதுகள் என மொத்தம் 77 விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழுக்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பாடுபடும் சான்றோர்களையும், தமிழறிஞர்களையும் சிறப்பிக்கும் வகையில், ஆண்டுதோறும் விருதுகளை வழங்கிச் சிறப்பித்து வந்தார்கள். அவ்வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, திருவள்ளுவர் திருநாள் விருதுகளாக 2021–ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது முனைவர் வைகைச்செல்வன் அவர்களுக்கும், 2020–ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது திரு. அ. தமிழ்மகன் உசேன் அவர்களுக்கும், அண்ணல் அம்பேத்கர் விருது திரு. வரகூர் அ. அருணாச்சலம் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா விருது மறைந்த திரு. கடம்பூர் எம்.ஆர். ஜனார்த்தனன் அவர்களுக்குரியதை அவரின் சார்பில் அவரது மகன் திரு. குடியரசு ஜனார்த்தனன் அவர்களிடமும், பெருந்தலைவர் காமராசர் விருது முனைவர் ச. தேவராஜ் அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருது கவிஞர் பூவை செங்குட்டுவன் அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது திரு. அறிவுமதி (எ) மதியழகன் அவர்களுக்கும், தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது திரு.வி.என்.சாமி அவர்களுக்கும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் வீ. சேதுராமலிங்கம் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கியதோடு, விருதாளர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை,

ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகளாக 2020–ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தாய் விருதிற்கு வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கம் தெரிவு செய்யப்பட்டு, விருதிற்கான தொகையான ரூபாய் 5 லட்சத்திற்கான காசோலை, கேடயம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அச்சங்கத்தின் தலைவர் கலைமாமணி முனைவர் வி.ஜி. சந்தோசம் மற்றும் இணைச் செயலாளர் திரு. வி.ஜி.பி. ராஜாதாஸ் ஆகியோரிடம் வழங்கி கௌரவித்தார்கள்.

கபிலர் விருது திரு. செ. ஏழுமலை அவர்களுக்கும், உ.வே.சா விருது திரு. கி. இராஜநாராயணன் அவர்களின் சார்பாக பெயரன் திரு. தீபன் அவர்களுக்கும், கம்பர் விருது மருத்துவர் எச்.வி. ஹண்டே அவர்களுக்கும், சொல்லின் செல்வர் விருது திரு. நாகை முகுந்தன் அவர்களுக்கும், உமறுப் புலவர் விருது திரு. ம.அ. சையத் அசன் (எ) பாரிதாசன் அவர்களுக்கும், ஜி.யு.போப் விருது ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த முனைவர் திருமதி உல்ரீகே நிகோலசு அவர்களின் சார்பாக அவரது மகன் திரு. தேசிகன் அவர்களிடமும், இளங்கோவடிகள் விருது திரு.மா. வயித்தியலிங்கன் அவர்களுக்கும், அம்மா இலக்கிய விருது முனைவர் தி. மகாலட்சுமி அவர்களுக்கும், சிங்காரவேலர் விருது திரு.ஆ.அழகேசன் அவர்களுக்கும், மறைமலையடிகளார் விருது திரு.மறை தி. தாயுமானவன் அவர்களுக்கும், அயோத்திதாசப் பண்டிதர் விருது முனைவர் கோ.ப. செல்லம்மாள் அவர்களுக்கும், அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது முனைவர் ஊரன் அடிகள் அவர்களுக்கும், காரைக்கால் அம்மையார் விருது முனைவர் மோ. ஞானப்பூங்கோதை அவர்களுக்கும், 2019–ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது திரு. சே. இராஜாராமன் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கியதோடு, விருதாளர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மேலும், **2020–**ஆம் ஆண்டிற்கான தமிழர்தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது தினமணி நாளிதழ் சார்பில் அதன் மேலாண்மை இயக்குநர் திரு. சித்தார்த் மற்றும் ஆசிரியர் திரு. கே. வைத்தியநாதன் அவர்களிடமும், தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் வார இதழ் விருது கல்கி வார இதழ் சார்பில் கல்வி பொறுப்பாசிரியர் திரு. ரமணன் அவர்களிடமும், தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது செந்தமிழ் திங்களிதழ் சார்பில் அதன் ஆசிரியர் திரு. இரா. சதாசிவம் அவர்களிடமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கியதோடு, விருதுத் தொகையாக தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, கேடயம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

**2020–**ஆம் ஆண்டிற்கான செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் விருதான தேவநேயப்பாவாணர் விருதினை முனைவர் கு. சிவமணி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியதோடு, ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

**2020–**ஆம் ஆண்டிற்கான சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுகளை மறைந்த திரு. சோ. சேசாச்சலம் அவர்களின் சார்பில் அவரது மகன் திரு. கோபிநாத் அவர்களிடமும், முனைவர் இராம. குருநாதன், திரு. ப. குணசேகர், முனைவர் பத்மாவதி விவேகானந்தன், திருமதி சு. ஜோதிர்லதா கிரிஜா, திரு. ஜெ. இராம்கி (எ) இராமகிருட்டினன், சுவாமி விமூர்த்தானந்தர், திருமதி மீரா ரவிசங்கர், திருமதி திலகவதி, திரு. கிருட்டின பிரசாத் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கியதோடு, விருதாளர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மதுரை, உலகத் தமிழ்ச் சங்க விருதுகளாக **2020–**ஆம் ஆண்டிற்கான இலக்கிய விருது பிரான்சு நாட்டைச் சேர்ந்த முனைவர் அலெக்சிசு தேவராசு சேன்மார்க் அவர்களுக்கும், மொழியியல் விருது சிங்கப்பூரைச் சேர்ந்த முனைவர் சுப. திண்ணப்பன் அவர்களின் சார்பில் அவரது மகள் திருமதி இன்பமணி அவர்களிடமும்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கியதோடு, விருதாளர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

2020—ஆம் ஆண்டிற்கான தமிழ்ச் செம்மல் விருது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவர் என்ற வகையில் சென்னை மாவட்டத்திற்கு திரு. ஜெ.வா. கருப்புசாமி அவர்களுக்கும், திருவள்ளூர் மாவட்டத்திற்கு திரு. வேணு புருஷோத்தமன் அவர்களுக்கும், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு முனைவர் சு. சதாசிவம் அவர்களுக்கும், வேலூர் மாவட்டத்திற்கு மருத்துவர் சே. அக்பர் கவுஸர் அவர்களுக்கும், கிருட்டினகிரி மாவட்டத்திற்கு திரு. மா. முருககுமரன் அவர்களுக்கும், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு முனைவர் இரா. வெங்கடேசன் அவர்களுக்கும், விழுப்புரம் மாவட்டத்திற்கு பரிக்கல் ந. சந்திரன் அவர்களுக்கும், கடலூர் மாவட்டத்திற்கு முனைவர் ஜா. இராஜா அவர்களுக்கும், பெரம்பலூர் மாவட்டத்திற்கு முனைவர் அ. செந்தில்குமார் (எ) தமிழ்க்குமரன் அவர்களுக்கும், அரியலூர் மாவட்டத்திற்கு முனைவர் சா. சிற்றரசு அவர்களுக்கும், சேலம் மாவட்டத்திற்கு கவிஞர் பொன்.சந்திரன் அவர்களுக்கும், தருமபுரி மாவட்டத்திற்கு பாவலர் பெரு.முல்லையரசு அவர்களுக்கும், ஈரோடு மாவட்டத்திற்கு முனைவர் கா. செங்கோட்டையன் அவர்களுக்கும், கரூர் மாவட்டத்திற்கு திருமதி சி. கார்த்திகா அவர்களுக்கும், கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு திரு. எம்.ஜி. அன்வர் பாட்சா அவர்களுக்கும், திருப்பூர் மாவட்டத்திற்கு முனைவர் துரை அங்குசாமி அவர்களுக்கும், நீலகிரி மாவட்டத்திற்கு திரு. ம. பிரபு அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு திரு. சோமவீரப்பன் அவர்களுக்கும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு திரு. ஜீவி (ஜீ. வெங்கட்ராமன்) அவர்களுக்கும், சிவகங்கை மாவட்டத்திற்கு திரு. இரா. சேதுராமன் அவர்களுக்கும், தஞ்சாவூர் மாவட்டத்திற்கு திரு.பழ.மாறவர்மன் அவர்களுக்கும், திருவாரூர் மாவட்டத்திற்கு திரு. இராம. வேல்முருகன் அவர்களுக்கும், நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு திரு.மா. கோபால்சாமி அவர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு திரு. ஆ. முனியராஜ் அவர்களுக்கும், மதுரை மாவட்டத்திற்கு முனைவர் போ. சத்தியமூர்த்தி அவர்களுக்கும், திண்டுக்கல் மாவட்டத்திற்கு திரு. தா. தியாகராசன் அவர்களுக்கும், தேனி மாவட்டத்திற்கு திரு. த. கருணைச்சாமி அவர்களுக்கும்,

விருதுநகர் மாவட்டத்திற்கு கவிஞர் சுரா (எ) சு. இராமச்சந்திரன் அவர்களுக்கும், திருநெல்வேலி மாவட்டத்திற்கு திரு. வீ. செந்தில் நாயகம் அவர்களுக்கும், தூத்துக்குடி மாவட்டத்திற்கு திரு. ச. காமராசு (முத்தாலங்குறிச்சி காமராசு) அவர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு திரு. பா. இலாசர் (முளங்குழி பா. இலாசர்) அவர்களுக்கும், திருப்பத்தூர் மாவட்டத்திற்கு முனைவர் ச. சரவணன் அவர்களுக்கும், செங்கல்பட்டு மாவட்டத்திற்கு நந்திவரம் பா. சம்பத் குமார் அவர்களுக்கும், இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு கவிஞர் பனப்பாக்கம் கே. சுகுமார் அவர்களுக்கும், தென்காசி மாவட்டத்திற்கு திரு. மு. நாராயணன் அவர்களுக்கும், கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு திரு. சி. உதியன் அவர்களுக்கும், மயிலாடுதுறை மாவட்டத்திற்கு திரு. துரை குணசேகரன் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கியதோடு, விருதாளர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை, பொன்னாடை ஆகியவற்றையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

2020 – 2021ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில், ‘‘தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட திருக்குறள் அரபு மொழிபெயர்ப்பு நூல் உலக அளவில் மாபெரும் அங்கீகாரத்தையும், தமிழின் பெருமையை உயர்த்துவதாகவும் அமைந்தது. இதனைக் கருத்தில் கொண்டு திருக்குறள் அரபுமொழியில் இசையுடன் ஒலிப்பதிவு செய்து வெளியிடப்படும்’’ என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற்கிணங்க, 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் அரபுத் துறை பேராசிரியர் முனைவர் ஜாகீர் உசேன் அவர்களால் திருக்குறள் அரபு மொழியில் இசையுடன் ஒலிப்பதிவு செய்து தயாரிக்கப்பட்ட ‘திருக்குறள் அரபு – இசைக்குறள் தகடு’ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, ஆற்காடு இளவரசர் திரு. முகம்மது அப்துல் அலி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் திருமதி வி.எம்.ராஜலட்சுமி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் திருமதி எஸ்.வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஒம்டெம் டாய், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் சந்தர மோகன்.பி, இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன் இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு. ச. முனியநாதன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.தெ. பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் (பொறுப்பு) முனைவர் கோ. விசயராகவன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**